இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 265 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 24 – வியாழக்கிழமை 07 மே 2026 – வெளியீடு 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 265 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 24 - Thursday 07 May 2026 - Dak 8 Pages ₹ 5.00


## தலைவர் மு.க.ஸ்டாலினுடன் சூப்பர் ஸ்டார் சந்திப்பு!



சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள இல்லத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் சந்தித்துப் பேசினார். அப்போது, வெற்றி பெறும் நேரத்தில் மட்டுமல்ல; இக்கட்டான சூழலிலும் தி.மு.க. தலைவருக்கு உறுதுணையாக இருப்பேன் என ரஜினிகாந்த் அவர்கள் தெரிவித்தார்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று

## தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம்!

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில், நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட கழக சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் இன்று (07-05-2026 வியாழக்கிழமை) மாலை 5.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், "கலைஞர் அரங்கில்" நடைபெறும்.

அதுபோது புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 05-05-2026.





### கொளத்தூருக்கும் எனக்குமான உறவு; தேர்தல் வெற்றி – தோல்விகளைக் கடந்த உறவு!

# உங்களோடுதான் நான் என்றும் இருப்பேன் !

### கொளத்தூர் தொகுதி மக்களுக்கு நேரில் நன்றி தெரிவித்த பின் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சிப் பதிவு!

சென்னை, மே 7 -

கழகத்தலைவர் - மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் மாலை, வீதி வீதியாகச் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

அப்போது கழகத் தலைவரின் திருமுகம் கண்டு கண்ணீர் மல்கினர் பொது மக்கள்!

இந்த உருக்கமிகு நிகழ்வையடுத்து - அது குறித்து வலைதளப் பதிவிட்ட கழகத் தலைவர் அவர்கள், "கொளத்தூருக்கும் எனக்குமான உறவு; தேர்தல் வெற்றி - தோல்விகளைக் கடந்த உறவு!" - என்றும் "உங்களுடன் நான் இருப்பேன்" என்றும் நெகிழ்ச்சியுடன் பதிவிட்டுள்ளார்.

கழகத் தலைவர் அவர்களின் - உணர்ச்சிமிகு வலைதளப் பதிவு வருமாறு:-



15 ஆண்டுகாலம் எனக்கு ஆதரவு நல்கியவர்கள் கொளத்தூர் தொகுதி மக்கள். அதில், 10 ஆண்டுகள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தும், 5 ஆண்டுகள் ஆளும் கட்சியாகவும் என்னால் இயன்ற அனைத்துத் திட்டங்களையும் கொளத்தூருக்குக் கொண்டு வந்து நிறைவேற்றினேன்.

தமிழ்நாட்டின் மாடல் தொகுதியாக அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் செய்து கொடுத்து, எந்தக் கோரிக்கையானாலும் நிறைவேற்றிக் கொடுத்த பெருமிதத்தோடே எனது கொளத்தூர் தொகுதி மக்களை நேரில் சந்தித்து இன்று நன்றி தெரிவித்தேன்.

ஒவ்வொரு தெருவிலும் சென்ற போது அங்கு நான் உருவாக்கிய விளையாட்டரங்கம், பூங்கா, 'முதல்வர் படைப்பகம்', நூலகம், திருமண மாளிகை, பேருந்து நிலையம், மருத்துவமனை, பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் போன்றவற்றைக் கண்டு, என் கடமையைச் சரிவர ஆற்றியிருப்பதில் மனநிறைவு கொண்டேன்.

உணர்ச்சிப் பெருக்கோடு என் நன்றியை ஏற்றுக்கொண்ட கொளத்தூர் மக்களுக்காக என்றும் நான் உண்மையாக உழைப்பேன். உங்களோடுதான் நான் என்றும் இருப்பேன்.

இவ்வாறு அப்பதிவில் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

### வலிமையான எதிர்க்கட்சியாக இருந்து

# தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தொடர்வோம்!

### தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்த பின் கூட்டணிக் கட்சி தலைவர்கள் உறுதி!

சென்னை, மே 7 -

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில்தான் தொடர்வதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகள் உறுதிபடத் தெரிவித்துள்ளன.**

சென்னை ஆழ்வார்பேட்டை இல்லத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் மற்றும் அக்கட்சி சார்பில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் லதா, செல்லசாமி உள்ளிட்டோர் சந்தித்தனர்.

சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய பெ.சண்முகம் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தொடர்வதாக தெரிவித்தார்.

இதேபோல், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் காதர் மொய்தீன், அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் சையது பாரூக், ஷாஜகான், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அபுபக்கர் மற்றும் நிர்வாகிகளும் சந்தித்தனர்.

சந்திப்புக்குப்பின் செய்தியாளர்களிடம் பேசிய காதர்மொய்தீன், தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில்தான் ஐ.யூ.எம்.எல். நீடிக்கும் என்றும், மதச்சார்பற்ற சக்திகளின் ஒற்றுமை எதிர்காலத்திலும் மிக மிக அவசியம் என்றும் கூறினார்.

தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், நாடாளுமன்ற உறுப்பினர் சுதீஷ் மற்றும் விஜய் பிரபாகரன் ஆகியோரும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இதேபோல், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, மனிதநேய மக்கள் கட்சி சார்பில் நாகை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அக்கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லாவும் நேரில் சந்தித்தார்.

தொடர்ந்து, மனிதநேய ஜனநாயக கட்சி சார்பில் சிதம்பரம் தொகுதியில் வெற்றி பெற்ற அக்கட்சியின் தலைவர் தமிமுன் அன்சாரி, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்தார். வெற்றி பெற்ற சான்றிதழ்களை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் காண்பித்து அவர்கள் வாழ்த்துப் பெற்றனர்.

இதேபோல், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் ஈஸ்வரன், பொள்ளாச்சி தொகுதியில் வெற்றி பெற்ற அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் நித்யானந்தம் ஆகியோர் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்தனர்.